உளி- 1 | ஓசை-69 | ஜனவரி-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| ச.ஆனந்தகுமார் | -4 |
| கோ.ஸ்ரீதரன் | -5 |
| பூங்கோதை கனகராஜன் | -6 |
| கோவை. நா.கி.பிரசாத் | -6 |
| ரகுநாத் வ | -7 |
| மகேஷ் சிபி | -7 |
| செ.ரா.கிருஷ்ண குமாரி | -8 |
| சந்துரு ஆர்.சி | -9 |
| அழ.இரஜினிகாந்தன் | -10 |
| சித்ராபுபேஷ்குப்தா | -11 |
| மகிழினி காயத்ரி | -11 |
| க.ராஜகுமாரன் | -12 |
| ப்ரியா வெங்கடேசன் | -13 |
| தி.கலையரசி | -14 |
| ஐ.தர்மசிங் | -15 |
| அ.சீனிவாசன் | -15 |
| நாகை ஆசைத்தம்பி | -16 |
| சுப. முத்துக்குமார் | -16 |
| ம.சக்திவேலாயுதம் | -17 |
| கோ. பாரதிமோகன் | -18 |
| ஷப்ரா இல்முத்தீன் | -19 |
| சகா | -19 |
| கலைச் செல்வி | -20 |
| சரண்யாசத்தியநாராயணன் | -21 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | -22 |
| மா. காளிதாஸ் | -23 |
| கி.சரஸ்வதி | -24 |
| இளங்கோ குமாரசாமி | -25 |
| ச.ஜெய் | -25 |
| க. அய்யப்பன் | -26 |
| மு.முபாரக் | -26 |
| ஸ்ரீவாரி | -27 |
| ஜோதி சரண் | -28 |
| பிரியா பாஸ்கரன் | -29 |
| இளையவன் சிவா | -29 |
| முகமது பாட்சா | -30 |
| பிரபுசங்கர் க | -31 |
| ஷெண்பா | -32 |
| வலங்கைமான் நூர்தீன் | -33 |
| ந.சிவநேசன் | -34 |
| ஸ்.டென்னிஸ் | -35 |
| தங்கேஸ் | -36 |
| வானம்பாடி | -37 |
| சே கார்கவி கார்த்திக் | -38 |
| நேசன் மகதி | -39 |



நகர்கிற ரயிலின் அதிர்வுகள்
பல்வேறு இசைக்குறிப்புக்கள்
வாசிக்கின்றன..

எட்டு மாதக்குழந்தையின்
நடுநிசி வீறிடலில்..

சலிப்பின் இருப்புகளற்று
குளிர்கிறது குழந்தைக்கு என
காற்றாடியை அணைக்கிறாள்
கீழ்ப்படுக்கை பெண்ணொருத்தி

தயக்கம் அணிந்த முதியவர்
கேட்காமலே தன்
கீழ்படுக்கை கொடுத்து
மேல் நகர்கிறான் பேரன்
வயது இளைஞன்

அமர்கிற இருக்கையில்
நெளிந்தும் சுரண்டும் படுத்தாலும்
பரஸ்பரம்கால்படவில்லையென
உறுதி செய்து கொண்டது
சக மனித மரியாதை..

விடிந்ததும் கனம் நிரம்பிய
பைகள் இறக்குவதற்கு
சங்கிலியாகின வெவ்வேறு கைகள்..

முகம் மறந்து அவரவர்கள் நகர்ந்து
விட்டனர் நின்று விட்டது ரயில்..
இப்போதும் நிற்காமல் இசைக்குறிப்புக்கள் மட்டும்
கேட்டு கொண்டே இருக்கின்றன

▪ ச.ஆனந்தகுமார்



அவ்வளவு எளிதாயிருக்கிறது
ரயில் குருட்டுப்பிச்சைகாரனின்
பாசமலர் பாட்டு மட்டும்
ரசித்து
பணம் கேட்க
முகம் திருப்பி கொள்வது.
அவ்வளவு எளிதாயிருக்கிறது
டோல் கேட் அரவாணியின்
கும்பிடை
இளக்காரமாய் புறக்கணிப்பது.
அவ்வளவு எளிதாயிருக்கிறது
கேட்க காது கேட்கும்
கிழட்டு தகப்பனை
கடந்து போவது
அவ்வளவு எளிதாயிருக்கிறது
ஒரு நாள் உப்பு கூடிய சமையலுக்கு
ஆயிரம் முண்டைகள் இழுப்பது.
அவ்வளவு எளிதாய்தான்
இருக்கின்றது
நம்மின்
ஆறடி பிரகிருதி சுட்டெலும்பு
சாம்பலாய் சமுத்திரத்தில்
சுவடின்றி கரைந்தே போவது...

■ கோ.ஸ்ரீதரன்



**தி**ரைச்சீலைகள் அசையும் பொழுதில்
உள் நுழைந்து
வீட்டிற்குள் மறைந்தும் தெரிந்தும்
ஓடி விளையாடுகையில்
சூரியக்கதிர்களுக்கு
அம்மாவின் முந்தானையில் ஒளியும்
குழந்தையின் சாயல்

- **பூங்கோதை கனகராஜன்**

**வே**ளா வேளைக்கு சோறு!
கூப்பிட்ட குரலுக்கு வேலையாட்கள்! மருந்து மற்றும்
இதர வகையறாக்கள் வாசலுக்கே வரும் வசதி!
போதா குறைக்கு சுற்றிலும் மனம் விட்டுப் பேச
சக வயது நட்புகள்!
எனக்கென்னப்பா ராஜா மாதிரி பார்த்துக்கறான்
என் மகன்" - என பெருமை பொங்க பூரித்த குரல்
மென்னு முழுங்கிச் சொல்கிறது
முகவரியில் அந்த முதியோர் இல்லப் பெயரை!

- **கோவை. நா.கி.பிரசாத்**



**எ**ல்லா இடத்திலும்
கடவுளை
நிர்மாணித்திருக்கிறான்
மனிதன்

எங்கேயும் பூரண
மனிதனை மட்டும்
படைக்கவே இல்லை
அக்கடவுள்

**ரகுநாத் வ**

**த**ன்னை மிதிக்கும் கால்களைத் தேடியபடி கிடக்கிறது
சாலையில் கிடக்கும் ஒற்றைச் செருப்பு
மிதிபடுவதில்
ஒரு சுகம் இருப்பதாகவும்
பாதுகாப்பாய் உணர்வதாகவும்
நம்பும் செருப்பு
தன் காதுகளைப் பொத்திக் கொள்கிறது
எவனோ ஒருவன்
தொண்டை கிழிய ஒலிபெருக்கியில் கத்திக்
கொண்டிருக்கிறான்
சுதந்திரம் பற்றி

**மகேஷ் சிபி**



**சொ**ல் பேச்சுக் கேட்காத
மகளுடன்
கா விட்டிருந்தேன்.

மௌனத்தை
தண்டனையாகத் தந்து
மனதுக்குள் நிறைய
பேசிக் கொண்டிருந்தேன் அவளிடம்.

கல்லூரியிலிருந்து வந்தவளை
திரும்பிப் பார்க்காமல்
சென்ற என்னை
வழிமறித்துக் கையில் பரிசைத் திணித்தாள்.

எனக்கு மிகவும் பிடித்த
கனகாம்பரம் பூச்செடி
முகத்தில் மகிழ்ச்சியும் சிரிப்பும்
ஒருசேர மலர்ந்தது.

இருவரும் ஒன்றாய் சேர்ந்து
செடியை நட்டோம்.

சிறுபிள்ளைப் போல
அடிக்கடி கோவித்துக் கொள்ளும்
என் பக்குவப்படாத மனதையும்
சிறிய வயதிலும்
முதிர்ச்சியாய் நடந்துக் கொள்ளும்
என் மகளையும் பார்த்து
கனகாம்பரம் பூக்கள் அழகாய் சிரித்தது.

■ **செ.ரா.கிருஷ்ண குமாரி**



இந்தத்தெரு வழியாகத்தான்
என் பிணத்தை
தூக்கிச்சென்றேன்
இந்தத் தெரு வழியாகத்தான்
எனது பாராட்டு ஊர்வலத்தையும் நடத்தினேன்
இந்தத்தெருவின் மூலமே
நான் யாரென அறியப்பட்டேன்
இந்தத்தெருவே எனது
முகவரியை மறுதலித்தது
இந்தத்தெருவில்தான்
நீங்கள் சுமந்துவந்த
வாழ்த்துப் பூச்செண்டுகளும்
இறைத்து சென்ற பூக்ககளும்
சிதறிக்கிடந்தன
எனக்கான புன்னகைகளை ஏந்திவந்த
இதே தெருவின் வழியேதான்
என் நினைவுக்குறிப்புகளையும்
எழுதிட
திரும்ப வருவீர்கள் என்பதால்
உங்களுக்கு
வசதியாய் இருப்பதற்காக
இதே தெருவில்தான்
என் கல்லறையும் அமைந்திருக்கும்.

**சந்துரு ஆர்.சி**



**போ**ட்டுக் கொளுத்த
எத்தனையோ
இருக்கிறது...!
போயும் போயும்
உங்களுக்கு
பழைய துணிகளும்
டயர்களுமா
கிடைத்தது...?

குடிநீர் தொட்டியிலும்
மலங்கரைக்கும்
கொடூர புத்தியைக்
கொளுத்தலாமே...!
ஆபாசத்தோடு
மாணவிகளுக்கு
வகுப்பெடுக்கும்
ஆசிரியர்களின்
கோணல் புத்தியைக்
கொளுத்தலாமே...!
பதவிக்காக
பழமைவாதிகளுக்கும்
பாசிசவாதிகளுக்கும்
சலாமடிக்கும்
பச்சோந்தி புத்தியைக்
கொளுத்தலாமே...!
தேர்தலுக்கு தேர்தல்
மட்டும்
தெருவீதிகளில் இறங்கி
கைகூப்பி யாசிக்கும்
தீயபுத்தியைக்
கொளுத்தலாமே ...!
மனிதநேயம் மறந்த
மண்ணின் வரலாறு
தெரியாத
மனிதர்களை எல்லாம்
மாபெரும் பதவிகளில்
அமர்த்தும்
மந்த புத்தியைக்
கொளுத்தலாமே...!
இப்படி...
கொளுத்த வேண்டிய
குப்பைகள்
ஆயிரம் இருக்க...
நீங்கள் கொளுத்தும்
குப்பைகளால்
மாசடைவது
காற்று மட்டுமல்ல
உங்கள் -
“ஹார்ட்டும்”தான்...!

**அழ.இரஜினிகாந்தன்**



**கா**லங்கள் பல கடந்திருக்கும்
ஒவ்வொரு பொருளுக்குள்ளும்
பொக்கிஷமாக
ஆயிரம் நினைவுகள்
வைரம் பாய்ந்து கிடக்க
நான் பழசென்று எதை எரிப்பது...?

- **சித்ராபுபேஷ்குப்தா**

**ம**ழை பிடித்து
விளையாடும்
குழந்தையின்
கைக்குழியிலிருந்து
சற்று
மெதுவாக
இறங்குகிறது
கடல் புக்கும்
நதி...
விளையாட்டிலிருந்து
வீடு மீளச் சிணுங்கும்
குழந்தையென

- **மகிழினி காயத்ரி**

# கண்ணீர்



கண்ணீரென்பது
தன்னை எரித்தபடி
நகரும் சூரியன்

ஏதுமற்ற வன்
தன் பாடலின்
உச்ச ஸ்தாயியை
தொடங்குகிறான்
கண்ணீரிலிருந்து..

குரல்வளைக்குள்
குதித்த சொற்கள்
மிதக்கின்றன
கண்ணீராய்..

வெட்டப்பட்ட நாக்குகளாய்
விழுகிற கண்ணீர்
பெருமரத்தின் விதை...

கரை தொட்டு தொட்டு மீண்டு
தனக்குள் அடங்குகிறது
பிம்பங்களை சூடிய
கண்ணீர்..

▪ க.ராஜகுமாரன்



**கூ**ன் வளைந்த கட்டைவிரல் குருவி
அலைபேசித் திரையில்
எழுத்துகளைக் கொத்தித் தின்ன
நொடிக்கொரு தரம்
கைதட்டும் இமைகளுடன்
தூர தேசத்திலிருக்கும் உன்னோடு
அன்றைக்கான ஒன்றரை GB தீரும்வரை
காதலித்த களைப்பில் உறங்கச்சென்ற
என் மேலிமையும் கீழிமையும்
கோர்த்திருந்த விரல்களை
நெட்டிமுறித்து
விழிக்கச் செய்கிறது
பாதபூஜை செய்தவளின்
முணுமுணுப்பும் பாத்திர உருட்டலும்
ரப்பர் மரத்தின்
அடுத்த ரணத்துக்காய்..

- ப்ரியா வெங்கடேசன்



உன்னை அடைவதற்கான
பாதையைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.
ஏன் வழி மறிக்கிறாய்?

யாழ் நரம்புகளின் அசைவு
என் வாழ்வு.
நீ மீட்டாத போது
அறுபடும் இசை தான்
காதல் என்பதா ?

எனக்குள் கனன்று எரியும் நெருப்பை
அணைத்து விடாதே.
தழலில் உறைய வைப்பது
உனக்கு மட்டுமே சாத்தியம்.

காதலின் துயரம் மாசற்றது.
அதன் சாரத்தைத் தேடித்தானே
பயணிக்கிறது
பிரபஞ்சத்தின் வேர்கள் ?

என்னில் இருந்து நான் வெளியேறும் போது
உன்னோடு இழைந்து கொள்ள
இறைஞ்சுகிறது ஆன்மா.
உயிரின் வதை இப்படித்தான் இருக்குமா ?

**தி.கலையரசி**



சர்க்கரை அளவு குறைவு.
மயங்கி விழுந்தார் பெரியவர்
ரேசன் கடை வாசலில் ...

▪ **ஐ.தர்மசிங்**

பஞ்சு மிட்டாயை
ருசிக்க
பஞ்சுமிட்டாய் வாங்க
வேண்டும்.
அதற்கு முன்பு
ஒரு குழந்தை மனதை
வாங்கிக் கொள்ள வேண்டும்

▪ **அ.சீனிவாசன்**



மரத்தை வெட்டிய இடத்தில்
பெரிதாய் குழிபறிக் கிறார்கள்
மழைநீர் சேகரிப்புக்காக,,,!

- **நாகை ஆசைத்தம்பி**

சாமிகிட்ட போயிருச்சு,
தாத்தா கிட்ட போயிருச்சு
எனச் சொல்லப்பட்டுக் கொண்டிருந்த
பாட்டி
உடலை விட்ட அடுத்த நொடி
நெஞ்சு வரை இறுக்கிக் கட்டிக் கொள்ளும்
பாவாடை இல்லாமல்
ஓடும் நீரில்
முழுதாகக் குளித்துவிட்டு
காற்றில் முடியை உலர்த்தியபடி கோயில் தெரு
டீக்கடை பெஞ்சில் அமர்ந்து
டீ குடித்துக் கொண்டிருக்கிறாள் ஜமால் திரையரங்கின்
இரண்டாம் ஆட்டத்திற்கு
இன்னும் நேரமிருக்கிறது.

- **சுப. முத்துக்குமார்**



மடித்து மடித்து இருந்து
சுருட்டப்பட்ட
ஒரு காகித்தைப்போல்
மனிதரொருவரைப் பார்த்தேன்...
அவர் மடிப்பிலெல்லாம்
அனுபவங்கள்...
சுருட்டப்பட்ட சுருக்கங்களில்
பல முகங்கள்...
காற்றில் காகிதமொன்று
பறக்க முனைந்தது..
வாழ்க்கையில் மட்டும்
அவர் இன்னுமின்னும்
சிறகடிக்க காகிதப் பறவையாக
முயன்று கொண்டிருக்கிறார்...
எழுதப்படாத காகிதமும்
பறக்கப்படாத அவரும்
வெள்ளந்தி வெள்ளையாக
இப்போது என்முன்!
நான் காகிதமாகட்டுமா?
இல்லை மனிதராகட்டுமா?
எதுவானாலும் சரி..
உயரே பறந்து கொள்
என்கிறது ஆழ்மனம்...
பறக்கிறேன் உங்கள் முன்!

- ம.சக்திவேலாயுதம் நெருப்பு விழிகள்

# கஸல்வழிச் சாலை



**வா**ர்த்தை உள்நோக்கிய விதை
உன் கண்கள் உதிர்த்த அது
என்னை
இதயத்திற்குள் அழைக்கிறது

என் காயம் பிச்சைப் பாத்திரம்
அநாதை யாசகனுக்கு
உன்னை தானமிடு

'வா' என்பது
ஓரெழுத்துச் சொல்
என்னிடம்
ஆயிரம் முறை உச்சரிக்கின்றன
உன் இமைகள்

உன் கண்திறப்பில்
காணவில்லை
இதயம் ஒரு பனித்துளி

உன் பண்டமாற்றில்
நியாயமில்லை
நீ
இணைதரா கொள்முதற்காரி

என் நீர்ப்பானையில்
நீ வெட்டிவேர்
உன்னைப் பருக மணக்கிறது
என் தாகம்

சந்தையில் வைத்த
இதயம் நான்
நீதான்
கண்களால் விலைபேசினாய்

பொட்டுவைத்துக் கொள்கிறாய் நீ
என் உடலில்
மச்சம் மலர்கிறது

பானை சோற்றுக்கு பதம் நீ
காதல்
உன்னைப்போல்தான் இருக்கவேண்டும்

■ கோ. பாரதிமோகன்



இடைவெளிக்கு மிகப் பெரும் சக்தியிருக்கின்றது

புரியாததை புரிந்து கொள்ளவும்
புரிந்ததை பொருந்திக் கொள்ளவும்..

- **ஷப்ரா இல்முத்தீன்**

ஓரமாக ஒதுங்கி நிற்கின்றேன்,
என்னைக் கடந்து போகின்றது
ஒரு இறுதி ஊர்வலம்...
ஒருவரை நிறுத்திக் கேட்டுவிடத்தான்
நினைக்கின்றது மனம்
யார்? எதனால்? எப்போதென்று?
படுத்தபடி போகும் அவரும் செவிமடுத்து
பதில் சொல்ல எத்தனிப்பார் தானே?
ஆனாலும்,
எதற்கு வந்தேன்? ஏன் போகிறேன்?
என்ற விடை கிடைக்கா
கேள்வியோடு தான் அவர்
பயணம் போகின்றார் என்பது
நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

- **சகா**

# சத்தியம்..



முதன் முதலாக
ஒரு சத்தியத்தைச்
செய்ய அத்தனை பயமாக இருந்தது.
சத்தியம் கொன்றுவிடும் பழிவாங்கிவிடும் என்கிற.
நடுக்கம் ஓடிக்கொண்டே இருந்தது..

இரன்டாவதாக செய்த சத்தியம்
ஒரு உண்மையின் பொருட்டு செய்தது
துரதிஷ்டவசமாக அது பொய்யாகிப் போனது..

மூன்றாவது சத்தியத்தைச் செய்யும்போது ஒரு
அப்பட்டமான பொய் அப்பழுக்கற்ற உண்மையானது..

இப்போது பல நூறு சத்தியங்களைச் செய்து விட்டேன்
இரு நூறு சத்தியங்களை மீறிவிட்டேன் ..
முன்னூறு சத்தியங்களை கொன்றுவிட்டேன்..

நேற்று கடவுளின் மேல்
இன்று படிப்பின் மேல்
நாளை அம்மா அப்பா மேல்
சத்தியங்கள் இடமாறிக்கொண்டே இருக்கிறது

இப்படித்தான் சத்தியம் என்னிடம்தோற்றுக்
கொண்டே இருக்கிறது என்றும் நான்
ஜெயித்துக்கொண்டே
இருக்கிறேன் என்றும் நினைத்தேன்

ஆனால் எனக்குத் தெரியாமல் நான் சத்தியத்திடம்
தோற்பது சத்தியத்திற்கு மட்டும் தான் தெரியும்
உங்களுக்குக் கூடத் தெரியாது.....

- **கலைச் செல்வி**



ஒரு மாலையில்
பேருந்து நிலையத்தில்
நான்கு பெண்களுக்கு
மத்தியில் நிற்கும் பொழுது
கடக்கும் பேருந்திலிருந்து
ஒரு தலை நம்மை மட்டும் குனிந்து
பார்க்கும் பொழுது
ஏற்படும் குறுகுறுப்பு...

நம்மையும் சேர்ந்து
இரண்டு பெண்கள் அம்மாவிற்கு
இருந்த பொழுதும்
சோற்று உருண்டையின் கடைசி
வழிசலை தேடி வந்து
நமக்கு ஊட்டும் பொழுது
ஏற்படும் பூரிப்பு...

அத்தனை தோழிகளுக்கும்
பிறந்தநாள் வாழ்த்து கூறுபவள்
நமக்கு மட்டும் வாழ்த்து அட்டையும்
அதில் கடைசியில்
அவள் கையெழுத்திற்கு மேல்
எழுதியிருக்கும்
உன் அன்பு தோழி
என்பதை படித்தவுடன்
ஏற்படும் சிலிர்ப்பு...

சரி..சரியென்று அனைவரிடமும் சம்பிரதாயமாக
கையசைத்து
விடைபெறும் உறவு
நம்மை மட்டும் அணைத்து முத்தமிட்டு
நகரும் பொழுது
ஏற்படும் பரிதவிப்பு...

அட..!
ஒருபிடி அதிகமான
அன்பு தான் நாம் வாழ்வதற்கு
எத்தனை பிடிப்பு.

- **சரண்யாசத்தியநாராயணன்**



உன் கோலம் ரசிப்பதற்காகவே
ஒவ்வொரு ஆண்டும்
தவறாமல் வருகிறது மார்கழி...

தெளித்தெழுப்பத் தேவையில்லை
உனது கோலத்துக்காகவே
உறங்காது விழித்திருக்கும் வாசல்...

உன் கோலத்தோடு தான்
தினமும் போட்டி
நீ வரையும் கோலங்களுக்கு...

புள்ளிகளை இணைத்தும்
தவிக்கவிட்டும்
உன் விரல்களின் நாட்டியம்...

உன் வளையல்களின்
இசைக்கு கட்டுப்பட்டு
கோடுகளிடையே நகராத புள்ளிகள்...

ஒவ்வொரு நாளும்
முகம் வாடிவிடுகின்றன
நீ பறிக்காத பூசணிப்பூக்கள்...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



**ப**னி விழுகிறது
மழையைப் போல விழுகிறது
மலையைப் போல உறைந்துள்ளது
என் வீட்டை யாராவது பார்த்தீர்களா
அங்கே நிறுத்தப்பட்டிருந்த காரை?
சுவருக்குச் சுவர் தாவுவதை
மறந்தேவிட்டது செல்லப்பூனை
நாய்க்கான நடைபயணக் கம்பளி
ஆன்லைனில் வாங்க வேண்டாமென்றால் கேட்டால்
தானே?
செயல்பாடுகளை நிறுத்திக் கொண்ட
குளிரூட்டிகளையும் பனி விடுவதாக இல்லை
எந்தச் சாலையையும் யாராலும்
சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை
திரையில் ஓடும் செய்தியை
எவ்வித நடுக்கமுமின்றித்
தெளிவாக வாசிக்கிறாள் இளம்பெண்
அழையா விருந்தாளியான நீங்கள்
குளிரூட்டப்பட்ட தேநீரைப் பருகுவதைத் தவிர வேறு
வழியில்லை
கணிப்புகள் ஒப்பீடுகளைப் பொய்யாக்கி
வசந்தகாலத்தின் மீது
தாயமும் பரமபதமும் விளையாடுகிறது பனி.
பொய்யான இப்பனி, தொரட்டி கொண்டு
ஒருதடவை உலுப்பினாலே
உதிர்ந்துவிடக் கூடியது தானென
சாமானியர்களைப் பொருள்படுத்தாதவன்,
செயற்கை வெப்பத்தைத் தெளிக்கிறான்
தன் இரும்புக்கரத்தால்.
இப்போது பாருங்கள்...
பனி எங்கும் இல்லை; இல்லவே இல்லை.

**மா. காளிதாஸ்**

## நினைவு



முன்ஜென்மத்தில் வயலாக
இருந்த நிலப்பரப்பில்
சிமெண்ட் விளைவித்துக்
கொண்டிருக்கிறது
மீப்பெரு ஆலை

கரும்புகை
வரைந்து செல்லும்
மாயத் தோற்றங்களில்
குளிர்நீரை வாரித் தந்த
வயல் கிணறும்
காற்றிலாடும் பயிர்களும்
வரப்போர நொச்சியும்

மாறி மாறித் தோன்றி
மறைகின்றன
நிலத்தின் ஒரு பகுதிக்குச்
சொந்தக்காரராக இருந்த
வாட்ச்மேன் தாத்தாவிற்கு

▪ கி.சரஸ்வதி



அரசியல் என்பது
வேறொன்றுமில்லை...
சிறிய மீனைப் போட்டு
பெரிய கடலைப் பிடிப்பது..!

▪ இளங்கோ குமாரசாமி

யாரோ ஒருவரின்
இரங்கல் பதாகையை
மாட்டிக்
கொண்டிருக்கும்
மரம்
வேரறுந்து
விழுந்திருக்கிறது
இந்த இரங்கலை
எங்கு மாட்டுவதென்று
தெரியவில்லை.

▪ ச.ஜெய்



மார்கழி மாசம்
தலைவாசல்கோலத்தில் வைக்க
கொஞ்சம் மாட்டு சாணமும்
ஒரு பூசணி பூவும் கொண்டு
வாங்க யென்று
அவள் பணித்த போது..
நான் அஷ்டகோணலாக
விரித்திருக்க கூடாது
என் முகத்தை ,
இன்றைய கோலத்திற்கு
மாதிரி படமாவதிலிருந்தாவது
தப்பித்து இருக்கலாம் .

- க. அய்யப்பன்

அவசர அவசரமாய்
பால் காய்ச்சுகிறாள் அம்மா,
பக்கத்து வீட்டில் குழந்தை
அழும் சத்தம்!

- மு.முபாரக்



**த**லை கவசம் அணிந்த
காதோரம்...
கைப்பேசியை
இட கரத்தால் சாய்ந்து
பிடித்திருக்க....
வலக்கரத்தால்
குழந்தையின்
வயிற்றை அணைத்து பிடித்திருக்க...
சற்றும் வேகம் குறையாமல்
பேசிக்கொண்டே
இரு சக்கர வாகம் பறக்க...
உருண்ட விழிகளில்
மருண்ட முயலென
அரண்டு கிடக்கிறது
பச்சிளம் குழந்தை
அன்னையின் மடியில்......

- **ஸ்ரீவாரி**



குன்றின் மேல் நின்றாலும்
குடத்திற்குள் இட்டாலும்
விளக்கை மறைக்கலாம்
வெளிச்சத்தை அல்ல...

வேலியிட்டு கட்டிவைத்து
வார்த்தைகளை பூட்டிவைக்கலாம்
இதயக்கூடுகளில் பூத்து விட்ட
நேசப்பூக்களை அல்ல...

மருவைத்து போட்டு விடும் மாறு வேடங்கள் எல்லாம்
பிறருக்கானது
நிழல்களுக்கானது அல்ல....

ஆன்மபந்தம் என்பது
சுடரின் வெளிச்சம்
நேசத்தின் வாசம்
யுகங்களாய் தொடரும்
நிழல்

■ ஜோதி சரண்

# மறப்பதென்பது..



ஒருவரை மறப்பதென்பது
சூரியன் இருப்பிலிருக்கும் நிலவு போல
பகல் முழுக்க
ஒளி வீசிக்கொண்டிருக்கும் வெளிச்சம் தான்
இரவில்
நினைவு கொள்ளச் செய்கிறது.

- **பிரியா பாஸ்கரன்**

உச்சாணிக்கொம்பின்
ஒற்றைக் கிளையில்
சிக்கிக்கொண்ட பட்டத்தின்
வாலுக்குள் மாட்டிய
மலரின் மணம்
கைவிரலின் சொடுக்கில்
இழுத்துக் கொண்டிருக்கும்
சிறுவனின் நாசியில்
இறங்கத் துடிக்கும் பட்டத்தின் விடுதலையைப் போல
அவரவர் வாழ்வை
ஆட்டி வைக்கிறது
சிந்தனை மரம்.

- **இளையவன் சிவா**



அவர்கள்
ஒரு குழுவாகச் சேர்ந்தார்கள்
கவிதைகளைப் பற்றிப் பேசினார்கள்
கவிஞர்களைப் பிய்த்து உதறிக் காயப் போட்டார்கள்.
கொஞ்சம் கொறித்துக் கொள்ள
கலப்புமொறுப்புகளை வரவழைத்தார்கள்...
பக்க பதார்த்தத்திற்கு
இரண்டு முழுவளவு மதுக்குப்பிகள் சேர்ந்து
கொண்டன...
இரண்டு மிடறுகள் இறங்கியதும்
நடிகைகளின் இடுப்பு நழுவி விழுந்தது...
உதடுகளைப் பற்றிப்
பேசத் தொடங்கினார்கள்...
வக்கிரம் கூடவே வந்து உட்கார்ந்து கொண்டது....
கெட்ட வார்த்தைகளை
ஆவர்த்தனம் கோர்த்து அழகாக்கினார்கள்...
இவர்கள் யாரெனக் கேட்டான்
வழிப்போக்கன்...
பரிமாறியவன் பதுக்கமாகவே சொன்னான்
ஓரமாக நில்
இவர்கள்தான் அறிவுஜீவிகள்!

- முகமது பாட்சா



ஏதோ ஒரு வாகனத்தில் அடிபட்டு
இரவு முழுக்க பல வாகனங்களை
என் மீது ஏற்றிக்கொண்டு
உயிரோடு உலா வந்ததற்கான
அத்தனை அடையாளங்களையும்
டயர்களின் அடியில்
துண்டு துண்டாக தொலைத்து விட்டு
சாலையோடு சாலையாக
ஒட்டிக் கொண்டிருக்கும்
என் வெளித்தோலை பார்த்து
அதன் மீது ஏற்றாமல்
விலகிப் போகும்
ஒரே ஒரு மானிட மனமும்
சின்னதாய் ஒரு அறமும் போதும்
காற்றோடு காற்றாக
கலந்து போய்விடுகிறேன்
என் ஆன்மாவின் நீட்சியாக
இப்படிக்கு
உங்கள் கூற்றுப்படி
ஒரு தெருநாயின் மனசாட்சி....

■ பிரபுசங்கர் க



நடைப்பயிற்சியின்போதோ
வாகனங்கள் எதிர்ப்படலிலோ
புன்னகைத்துக் கொள்ளும்
பரிச்சயம் மட்டுமேயிருந்த
நான்காம்மாடி அம்பிகாவின்
அம்மா தவறிவிட்டார்களென
வாட்சப் குழுவில் தகவல்
வந்ததும் போவதா தவிர்ப்பதா
வேலை தடைபடுமே என்ற மனக்குழப்பங்களிடையே
மின்தூக்கி வழியாக எடுத்துவர
முடியாமல் படிக்கட்டு வழிவரும்
சத்தம் கேட்டு கதவடைத்துக்
கொள்ளும் உங்களுக்கும் வரலாம்
அபார்ட்மெண்ட் மரணங்கள்..

■ **ஷெண்பா**

# கடவுளின் கடைவாயில் ஒழுகும் போதை



இந்த குளிர்
இந்த இருள்
இந்த இரவு
உறக்கம் தொலைத்தவர்களை
வெறிபிடித்த ஓநாயைப் போல
குதறிக்கொண்டிருக்கிறது.

அதன் கோரத்தின் கடைவாயில்
ஒழுகிக்கொண்டிருக்கும்
குருதியின் வீச்சம் போதையை கமழ்விக்கிறது.
அவ் வாசனையில் திளைத்து திளைத்து
ராத்திரியை மேலும் நீட்டித்துக்கொள்கிறேன்.

குளிர் அப்பும் இந்த இருளும் இரவும்
மிருகம் அல்ல;
கடவுள்.
பகலே சற்று தொலைவில் இரு.

▪ **வலங்கைமான் நூர்தீன்**

# இன்று கிறிஸ்துமஸ் தினம்



1
தற்போதைய இனிப்புகளின் சுவை
உடனடியாக மரத்துவிட
ஆறு வருடங்களுக்கு முன்
பேருந்துப் பயணத்தில்
முகமறியாச் சிறுமி
தந்துப்போன
ப்ளம் கேக்
இன்னும் இனிக்கிறதே ஏன்.

2
சிலுவையின் மீது
அமர்ந்திருக்கும் புறாக்கள்
எழும்புகையில் மறக்காமல்
சிறகசைத்து விசிறிவிடுகின்றன
யுகம் கடந்து படிந்திருக்கும்
குற்ற உணர்வின் மீது.

3
மேரி என்ற பெயர் நன்கு பரிச்சயம்
பிறகு
ஜூலி பிடித்துப்போனது
வண்ணநிலவனுக்குப் பின்
எஸ்தர் அந்த இடத்தை
பிடித்துக் கொண்டாள்
இப்போது
குளியல் சோப்பின் வாசம் வீசும்
தூயப் பெயர்களின் மீதமர்ந்து
என் நினைவு குளிர்காய்கிறது

4
இன்ன இனம்
இன்ன மதம்
என படித்தபிறகு
வகைபிரிக்கத்
தெரிந்து கொண்டேன்
பேருந்தில் கடக்கும்போது
பொட்டு வைக்காத சாமி
என்றே
கன்னத்தில் போட்டுக் கொள்வாள்
அம்மா.

▪ **ந.சிவநேசன்**



உடைந்த சன்னல் கண்ணாடி
வீட்டுக்குள் துண்டுத் துண்டாக
வெயில்...

வாசலில் தேங்கிய மழைநீரில்
அலை அலையாய் தெரிகிறது
வீட்டுத் தட்டோடுகள்...

கரும்பு தோட்டத்தில்
எந்த மனிதனின் கால்தடம்
இறந்துகிடக்கிறது சில எறும்புகள்...

விரிசல் விழுந்த சுவரில்
வளைந்து நெளிந்து இருக்கிறது
வரைந்த நதி...

பேருந்தில் சில மாணவர்கள்
கம்பியில் தொங்கியபடி பயணிக்கின்றன
மழைத் துளிகள்...

சற்றுமுன் பேசியவர்கள்
நூலகத்தில் அமர்ந்தபடி
ஊமையானார்கள்...

பூ விழுந்த காம்பில்
ஒன்று கூடிய மேகக்கூட்டம்
ஒரு வெள்ளை ரோசா...

புட்டிப்பால் குடிக்கும் குழந்தை
காலையிலும் மாலையிலும்
பசுவை விட்டுப்பிரியும் கன்றுகுட்டி...

தண்ணீர் கலந்த பால்
உயர்ந்து நிற்கிறது
பால்காரனின் அடுக்குமாடி வீடு...

ஒரு தெருவிளக்கு ஒளி
பட்டமரக் கிளைகளில் மின்னும்
அடடா எத்தனை மழைத்துளிகள்...

குருவி சத்தம் கேட்டு
கதவைத் திறக்கிறேன்
மனைவி கையில் கூண்டுக்கிளி...

**ஸ்.டென்னிஸ்**



ஒவ்வொரு மனிதர்களும்
ஒவ்வொரு நட்சத்திரம் எனக்கு
நீயும் ஒரு நட்சத்திரம் தான்

உன்னைப்பற்றிய அத்தனை இரகசியங்களையும்
என்னிடமிருந்து அறிந்து கொண்ட அது
உன் மாய வசீகரிப்பில்
நீயாகவே மாறி
புதுப்பிறப்பெடுத்தது ஒரு நாள்

அன்றிலிருந்து என்னைப்பார்த்த நொடி
மேகங்களுக்குள் ஓடி ஒளிந்து கொள்கிறது
காரணமின்றி

ஓ பிரிய நட்சத்திரமே
மேகங்களுக்குள் ஒளிந்து கொண்டு
நீ என்னைப்பார்த்துக் கொண்டிருப்பதை
நானும் பார்த்துக்கொண்டு தானிருக்கிறேன்

அங்கிருந்து பார்க்கும் போது
நான் என்ன உனக்கு ஒரு நட்சத்திரமாகவா
தெரிந்து கொண்டிருக்கிறேன்

▪ **தங்கேஸ்**



ஓங்கி ஒலிக்க வேண்டிய
வார்த்தைகள்
மௌனம் காத்தும்
தயங்கியும்
இடம்பிடித்துக் கொள்கின்றன

முயன்று விழுங்கியும்
நேர்மையென நிமிர்ந்து
விரியும் வார்த்தைகள்
தலைகனமெனவும்
தாங்கொண்ணா பொறாமையெனவும்
மெருகுகைகள் உந்திவிட

திடீரென்ற
கன்னி வெடில் போல
சில மொழிதல்கள்
கேட்பவரிடமும்
பார்ப்பவரிடமும்

இப்போதேனும் மொழியிடையே
இயன்றவரை அனுமதி வேண்டித் துழாவுகிறேன்,

கடித்துக் குதறவோ
பிராண்டிச் செல்லவோ அல்ல
சலாம் போடும்
சிறு கொஞ்சல்கள் தேடி.

**வானம்பாடி**

# புத்தன் நொடிகள்



இழந்தவன் விட்டுப் போன
இடத்தில்
இன்னொருவனின் புதிய மறதி துளிர்கிறது

புத்தனைக் கண்டு
சிப்பிகளை தேடுகிறேன்
ஆசையின் ஒரே ஒரு முத்தின் சுவாசத்திற்கு...

கண்டிப்பாக அவை அனைத்தும்
உன்னைக் கடந்து என்னை சேர்ந்தவை
என்னை அடைந்து உன்னை கடப்பவை...

இலைகள் விழுவதற்குள் மரத்தின் வயது
கூடாமலிருக்கிறது
விழுந்த இலைகளெல்லாம் வாழ்ந்த மரமாகிறது...

ஆசை துறவு இவைகளை மட்டும் நிரப்பி நகர்கிறது
நிழலை மட்டும் விரும்பிய புத்தன் நொடிகள்....

- **சே கார்கவி கார்த்திக்**



பதமேறிக்கிடக்கிறது
வெயில்

ஊசலாடும் உயிர்களை
குளிரைப்போத்தி எடுத்துச்செல்கிறது
ஊதக்காற்று!

கோவில்களில் அதிகாலையில் ஒலிக்கும்
பாடல்களோடு
சேர்ந்தே கேட்கிறது எங்கும் இருமல் சத்தங்கள்

கடை அடைக்கும்வரை
சிமெண்ட் தரைக்கு காத்திருந்து குட்டிகளோடு
வளைந்து படுத்துக்கொள்கிறது
நாயொன்று

கூட்டுக்குள் தன் இறக்கைகளுக்குள் குஞ்சுகளை
அடக்கிக்கொண்டு தன் சூட்டில் ஒத்தடம்கொடுக்கிறது
தாய்ப்பறவை

புகையென இழையும்
பனியில்
பேருந்து நிறுத்தத்தில் கோணிப்பைக்குள்
நிரம்பக்கிடக்கிறான்
ஒரு மனநோயாளி

பனியில் கருகிய
பூக்களைப் பார்த்து
சிவந்துகிடக்கிறது
விவசாயி மனம்

ஊசிகுத்தும் குளிரில்
தூக்கம் தொலைத்த
நடைபாதைவாசி
நள்ளிரவை பீடியை இழுத்து சூடாகிறான்

சூரியனில் குளிர்காய
காத்துக்கிடக்கின்றன உயிர்கள்

சளியும் சளி சார்ந்த மாதமாக நிரம்புகிறது
மருத்துவமனை படுக்கைகள்

கடவுளுக்கேற்ற மார்கழி
உயிர்களுக்கு அப்படியானதாக இல்லை...

**நேசன் மகதி**


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN